1970 ஏப்ரல் 2]

கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கோயில்களுக்கு உரிய நிலங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பது அறங்காவலர்களுக்கே தெரியவில்லை, நிர்வாக அதிகாரிகளுக்குக் கூடத் தெரியவில்லை. தமிழ்நாடு முழுவதும் உள்ள கோயில்களுக்கு உரிய சொத்துக்கள், நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதை அறிவதற்காக பழைய ரெக்கார்டுகளை எல்லாம் எடுத்து சர்வே செய்து கண்டு பிடிப்பதற்காக தனிஅதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அந்தச் சொத்துக்களை யார் அனுபவிக்கிறார்கள், குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதா அல்லது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை எல்லாம் பார்த்து அதற்குப் பிறகு குத்தகைக்கு விடலாமா, அல்லது மனைக் கட்டுகளாக கிரயத்துக்குக் கொடுக்கலாமா என்பது பற்றி எல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளுடைய ரிப்போர்ட் வந்த பிறகு அதுபற்றி முடிவு செய்யப்படும்.

கோயில் ஊழியர்கள்

* வினா 651 திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயில் ஊழியர்களின் பதவி, ஊதியம் ஆகியவற்றை **Regularis** மறு பரிசீலனை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அவர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன்: இப்போது அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. வைத்திய வசதி போன்ற இதர சலுகைகளும் இல்லை. அவர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட்டால் நிறைய சம்பளம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலேமேல் வேலை செய்பவர்கள் கீழே வேலை செய்பவர்கள் என்று பல பிரிவுகளுக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுக்க வேண்டும். ஆகவே, அவர்களை அரசாங்க ஊழியர்களாகச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: அந்தக் கோயில் சிப்பந்திகளில் இரண்டுவிதமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். உள்துறை சிப்பந்திகள், உள்துறை அல்லாத சிப்பந்திகள், கோயில் பூசாரிகள் அர்ச்சகர்கள், குருக்கள் போன்றவர்கள் உள்துறை சிப்பந்திகள் குமாஸ்தாக்கள், மானேஜர்கள், டிரைவர்கள், எலக்ட்ரிஷியன்கள், எஞ்சினியர்கள் ஆகியோர் உள்துறை அல்லாத சிப்பந்திகள். உள்துறை சிப்பந்திகள் தவசுக்கு வேலை செய்கிறார்கள். அதாவது

நெல் போன்ற தானியங்களை வாங்கிக்கொண்டு வேலை செய்கிறார்கள். அதோடு சம்பளம் வாங்குகின்றவர்களும் இருக்கிறார்கள். சிலபேர் அங்கே கிடைக்கின்ற நெய் வேத்தியத்தை—சோறு முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அங்கே இருப்பவர்கள் மூன்று ரூபாயிலிருந்து மூந்நூறு ரூபாய் வரை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த உள்துறை சிப்பந்திகளை ப்ரொவின்ஷியலைஸ் பண்ணுவது என்பது கஷ்டமான காரியம். அவர்கள் பாரம்பரியத்தில் வேலை பார்க்கிறவர்கள். ஆகவே, கோயில்களை ஏ, பி, சி, டி என்று நான்கு கிரேடுகளாகப் பிரித்து ஒவ்வொரு கிரேடு கோயிலுக்கும் சிப்பந்திகளை மாற்றும் நிலையை ஏற்படுத்தலாம். இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அவர்களை அரசாங்க சிப்பந்திகளாக ஆக்க முடியாது. ஒரு கோயிலில் இருக்கும் மானேஜர், கிளார்க் ஆகியவர்கள் அங்கு இருக்கும் நிர்வாக அதிகாரிகளுக்குக் கூடக் கட்டுப்பட்டு நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள். அங்கிருக்கும் டிரஸ்டியை பிடித்துக்கொண்டு நிர்வாக அதிகாரியை மாற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் எந்தவிதமான தவறுக்கும் தயாராக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் இருப்பதால் கோயில்களை கிரேடு வாரியாகப் பிரித்து சிப்பந்திகளை அவ்வப்போது மாற்றுவது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. ராஜகுமார் விஜய ரகுநாத தொண்டமான்: கொஞ்ச நாட்களுக்கு முன்பு புதுக்கோட்டை தேவஸ்தான ஊழியர்கள் இந்தக் கோரிக்கைகளுக்காக மனுக் கொடுத்தார்களே, அது அரசாங்கத்திற்கு வந்ததா? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: அரசாங்கத்திற்கு அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது. புதுக்கோட்டை நிலைமையே தனி. அங்கு கோயில்கள் இருக்கின்றனவே தவிர, பணம் கிடையாது. குருக்கள் கூட வசூல் செய்துதான் பூஜை செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு நான்கு லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். அங்கு ஆயிரத்தி சொச்சம் சிப்பந்திகள் இருப்பதால் இந்த ரூபாயைப் பங்கிட்டுக் கொடுக்கும்போது குறைவாகத்தான் வருகிறது. அவர்கள் அங்கிருக்கும் நிலங்களைத் தங்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

கோயில் நிதியைக் கொண்டு தொடங்கப்பட்ட கல்லூரிகள்.

* வினா 652 **திரு. கரு. சீமைச்சாமி:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அறநிலைய பாதுகாப்புக்கு உட்பட்ட ஆலய வருமானத்திலிருந்து கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எத்தனை கல்லூரிகள்?